டிஜிட்டல் டெய்லி
# அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 10.06.2026 புதன்கிழமை | பக்கங்கள் 31 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 292 - Madurai | Online Edition

# தோல் மற்றும் தோல் சாராத உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்வதில், தமிழ்நாடு முன்னணி மாநிலமாகத் திகழ்கிறது

புது தில்லி, ஜூன் 9

மத்திய தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறையின் இணைச் செயலாளர் நிதி கேசர்வானி, ராணிப்பேட்டை பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய மாநில புத்தொழில் அமைப்பு அதிகாரிகளுடன் கலந்துரையாடினார். கடந்த பத்தாண்டுகளில், இந்தியாவில் ஏற்பட்டுள்ள பொருளாதார மாற்றத்தை சுட்டிக்காட்டிய அவர், 2024-25 ஆம் நிதியாண்டில் 11% மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி, 2,521 ஒழுங்குமுறை விதிமுறைகள் குறைக்கப்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டி, தமிழ்நாட்டின் சிறப்பான செயல்பாட்டைப் பாராட்டினார்.




'மேக் இன் இந்தியா', உற்பத்தியுடன் கூடிய ஊக்கத் தொகை திட்டங்களின் கீழ், தமிழ்நாடு முக்கிய மையமாக உருவெடுத்து உள்ளது. நாட்டின் தோல் உற்பத்தியில் 40 சதவீதத்திற்கும் அதிக பங்களிப்பைக் கொண்டுள்ள இம்மாநிலம், தொழில்நுட்பம், ஏற்றுமதி சார்ந்த உற்பத்தி முறைக்கு வெற்றிகரமாக மாறி வருகிறது. இத்துறையை வலுப்படுத்த, மத்திய அரசின் ரூ.1,700 கோடி மதிப்பிலான 'இந்திய காலணி மற்றும் தோல் மேம்பாட்டுத் திட்டம்' மார்ச் 31, 2026 அன்று நிறைவடைந்தது.

ராணிப்பேட்டையின் பனப்பாக்கத்தில் 290.58 ஏக்கர் பரப்பளவில், ரூ.125 கோடி மத்திய அரசின் நிதியுதவியுடன் கூடிய பிரம்மாண்டமான தோல், காலணி மற்றும் உபகரணங்கள் தொகுப்புக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. மேலும், உலகளவில் போட்டித்தன்மையை அதிகரிக்க, ஸ்டெப் என்ற துணைத் திட்டத்தின் கீழ், எட்டு பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத் திட்டங்கள், ஐடிஎல்எஸ் துணைத் திட்டத்தின் கீழ், 89 நவீனமயமாக்கப்பட்ட அலகுகள், எப்டிடிஐ சென்னை வளாகத்தில் உட்கட்டமைப்பு மேம்பாடுகள் ஆகிய வசதிகளை மேம்படுத்துவதில் ஆதரவு அளிக்கப்பட்டது.

மாநிலத்தின் தோல் துறை சிறப்புப் பொருட்கள் மூலம் இந்தியாவின் பாதுகாப்புத் தொழில் வழித்தடத்திற்கும் ஆதரவளித்து வருவதாக இணைச் செயலாளர் வலியுறுத் தினார். 35-க்கும் அதிகமான முக்கிய பாதுகாப்பு நிறுவனங்கள் செயல்பட்டு வருவதாலும், மேலும் 30 நிறுவனங்கள் அமைக்கப்பட உள்ளதாகவும், தமிழ்நாடு அரசு ஒருங்கிணைந்த தொழில் புரிவதற்கான சூழல் அமைப்பை உருவாக்கி வருகிறது என அவர் தெரிவித்தார். மாநிலத்தின் முன்னணி புத்தொழில் நிறுவனங்களுக்கான சூழலமைப்பு, அறிவுசார் சொத்துரிமைப் பதிவுகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் ஆகியவை குறித்து கேசர்வானி பாராட்டுத் தெரிவித்தார். மேலும், நாடு முழுவதும் முதலீட்டிற்கு உகந்த, உடனடியாகச் செயல்பாட்டிற்கு வரக்கூடிய 100 தொழிற்பூங்காக்களை உருவாக்கும் 'பவ்யா' திட்டம், 60 இலக்குசார் சீர்திருத்த நடவடிக்கைகளை உள்ளடக்கிய துறை சார் 'ப்ராப் பிளஸ்' என்ற கட்டமைப்பு, 30 நாட்களுக்குள் விரைவான வர்த்தக அனுமதி வழங்குவதை உறுதி செய்வதற்கான 'ஒழுங்குமுறை மதிப்பீடுகளை' முறைப்படுத்துதல் போன்ற அம்சங்களை உள்ளடக்கிய, தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறையின் தொலை நோக்குடனான 'சீர்திருத்தத் திட்டம் 2026'-ஐ அவர் எடுத்துரைத்தார்.

தோல் மற்றும் தோல் சாராத உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்வதில், தமிழ்நாடு முன்னணி மாநிலமாகத் திகழ்கிறது. 2025-26-ம் ஆண்டில், இத்துறையில் நாட்டின் மொத்த ஏற்றுமதியில், 37 சதவீத பங்களிப்புடன், தமிழ்நாடு 1.59 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான தோல் மற்றும் தோல் பொருட்களை ஏற்றுமதி செய்து உள்ளது. தமிழ்நாட்டில் உள்ள பணியாளர்களில் 40 சதவீதத்திற்கும் அதிகமானோர் பெண்கள் ஆவர். காலணி உற்பத்தியில் ஈடுபட்டுள்ள முன்னணி வெளிநாட்டு ஒப்பந்த உற்பத்தி நிறுவனங்கள் சென்னையில் தங்களது உற்பத்தி நடவடிக்கைகளைக்

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

கொண்டுள்ளன. இத்தகைய உற்பத்தி, ஏற்றுமதிச் செயல்பாடு, மாநிலத்தின் வலுவான உற்பத்திச் சூழல் அமைப்பு, திறன் வாய்ந்த பணியாளர்கள், உலகளவிலான மதிப்புச் சங்கிலியுடன் வலுவான ஒருங்கிணைப்பு ஆகியவற்றை வெளிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.

சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக, இத்துறையில் உள்ள முன்னணி நிறுவனங்களின் பிரதிநிதி களுடன் கலந்துரையாடல் நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன. தோல் உற்பத்தித் துறையில், இந்தியாவின் நீண்டகால தொலைநோக்குப் பார்வை குறித்த இதில் கவனம் செலுத்தப்பட்டது.

2030-ம் ஆண்டிற்குள், தோல், காலணி உற்பத்தித் துறையில், 50 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான உற்பத்தியை அடை வதற்கான வாய்ப்புகள் உள்ளன என்று துறைசார்ந்த மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன. 36 பில்லியன் அமெரிக்க டாலர் அளவிலான உள்நாட்டு நுகர்வும், 14 பில்லியன் அமெரிக்க டாலர் ஏற்றுமதியும் இதில் அடங்கும். வளர்ந்து வரும் ஆடை-அலங்கார விழிப்புணர்வு, விரிவடையும் சில்லறை விற்பனை கட்டமைப்புகள், மின்னணு வர்த்தகத்தின் வளர்ச்சி, மேம்பட்ட சர்வதேசச் சந்தை வாய்ப்புகள் ஆகியவை, வளர்ச்சிக்கான உந்துசக்திகளாகத் திகழ்கின்றன. இவை, இத்துறையில் உருவாகி வரும் வாய்ப்புகளைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள வகை செய்கிறது.




அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

KALYAN JEWELLERS

## சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# அடுப்பில்லா சமையல்

## சாட் வகைகள் : ஓர் அலசல் ஆய்வு

**பொரி சாட்**

**தேவையான பொருட்கள்**

பொரி ஒரு கப்

கேரட் துருவல் நாலு தேக்கரண்டி

வெங்காயம், தக்காளி தலா ஒன்று

ஓமப்பொடி தேவையான அளவு

உருளைக்கிழங்கு சிப்ஸ் ஒரு தேக்கரண்டி

வெள்ளரி துருவல் மற்றும் கொத்தமல்லி தேவையான அளவு

சாட் மசாலா பொடி மற்றும் உப்பு தேவையான அளவு

ஸ்வீட் சட்டினி ஒரு தேக்கரண்டி

கிரீன் சட்னி ஒரு தேக்கரண்டி

**செய்முறை**

வெங்காயம், தக்காளியை பொடி பொடியாக நறுக்கவும் இதனுடன் பொரி, கேரட் துருவல், ஓமப்பொடி, உருளைக்கிழங்கு சிப்ஸ், ஸ்வீட் சட்னி, கிரீன் சட்னி, வெள்ளரி துருவல், சாட் மசாலா பொடி தேவையான அளவு, உப்பு தேவையான அளவு சேர்த்து நன்கு கிளறி விட்டு பரிமாறும் போது கொத்தமல்லி இலைகளை தூவி நன்கு அலங்காரம் செய்து பரிமாறவும். இது மிகவும் சுவையானது.

தொகுப்பு : *G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.*

நாளை தொடரும்...

தலைக் கவசம் உயிர்க் கவசம்

# சிறுதானிய விதைப்பரிசோதனை செய்ய விவசாயிகளுக்கு அழைப்பு

கோயம்புத்தூர், ஜூன் 9

விவசாய பெருமக்கள் விதைப்பரிசோதனை செய்து சிறு தானியங்கள் சாகுபடி செய்ய, வேண்டுமென கோவை விதை பரிசோதனை அலுவலர் சை.நர்கீஸ் அறிவுறுத்தி உள்ளார்.



தமிழ்நாட்டில் சிறுதானியங்கள் ஆரோக்கியமான மற்றும் பாரம்பரிய உணவாக கருதப்படுகின்றன.

வரகு, சாமை, தினை, குதிரை வாலி, பனிவரகு, கம்பு மற்றும் கேழ்வரகு போன்றவை முக்கிய சிறுதானி யங்கள் இவை நார்ச்சத்து, புரதம் மற்றும் இரும்புச் சத்து நிறைந்தவை. நீரிழிவு மற்றும் உடல் பருமன் கட்டுப்பாட்டிற்கும் இவை சிறந்த உணவாகும்.

சிறுதானியங்களில் மக்னீசியம், கால்சியம், பாஸ்பரஸ், நார்ச்சத்து, பி-வைட்டமின்பான்ற நுண்ணுட்டச் சத்துக்கள் நிறைந்துள்ளன. சிறு தானியங்களை குறைந்த இடுபொருள் செலவில் பயிரிடலாம்.

- வறட்சியை தாங்கக்கூடியவை.
- பெரும்பாலான சிறுதானியங்கள் பயிரிடப்பட்டு மிக குறுகிய காலத்தில் (60 முதல் 120 நாட்கள்) அறுவடைக்கு வந்துவிடும்.
- மிதமான தட்பவெப்ப நிலையிலும் மண்வளம் குறைந்த இடங்களிலும் சாகுபடி செய்யலாம்.
- சிறுதானியங்களில் பூச்சி நோய் தாக்குதலும் குறைவாக காணப்படுகிறது.

இன்றைய காலச்சூழலான குறைவான மழைப்பொழிவு, குன்றிய மண்வளம், தேவைக்கு அதிகமான உரப் பயன்பாடு மற்றும் அதனால் ஏற்படும் சூழல்கேடுகள், வேளாண் இடுபொருள் விலை ஏற்றம் போன்ற காரணங்களால் சிறுதானிய சாகுபடியே லாபம் தரக் கூடியது.

சிறுதானியங்களின் குறைந்தபட்ச முளைப்புத்திறன் 75% ஆகவும், அதிகபட்ச ஈரப்பதம் 12% மற்றும் குறைந்தபட்ச புறத்தூய்மை (97% - 98%) இருத்தல் அவசியம். சிறு தானியங்களை விதைப்பதற்கு முன்பு தரமான விதைகளாக உள்ளனவா என்பதை அறிய விதை பரிசோதனை மேற்கொள்வது அவசியம்.

கோவை மாவட்டத்தில் விதை பரிசோதனை நிலையம், 1424 தடாகம் சாலை, (அருகில்), கோவை - 641 013 என்ற முகவரியில் செயல்பட்டு வருகின்றது.

விவசாயிகள் மற்றும் உற்பத்தியாளர்கள் நேரடியாக பரிசோதனைக்கு அனுப்பும் போது இணைய தளம் மூலம் பதிவு செய்த பின்னர், ஒரு விதைமாதிரிக்கு ரூ.80/- கட்டணம் செலுத்த வேண்டும். விதை பரிசோதனை நிலையத்திற்கு பயிர், இரகம் மற்றும் குவியல் எண் போன்ற விவரங்களுடன் 25 கிராம் அளவிலான சிறு தானிய விதை மாதிரியினை அனுப்பி விதையின் தரத்தை அறிந்து கொள்ளலாம்.

## குறிஞ்சிப்பாடி கூட்டுப் பண்ணை விவசாயிகள் உற்பத்தியாளர் நிறுவனத்திற்கு மாணவர்கள் கல்விசார் பயணம்

கடலூர், ஜூன் 9

அண்ணாமலை பல்கலைகழக வேளாண் புல இறுதி ஆண்டு இளங்கலை வேளாண் மாணவர்களின் கிராமப்புற வேளாண் பணி அனுபவத் திட்டம் (RAWE) சார்பில், மாணவர்கள் குறிஞ்சிப்பாடி பகுதியில் அமைந்துள்ள KURINJIPADI COLLECTIVE FARMING FARMERS PRODUCER COMPANY LIMITED, கொல்லுக்காரன்குட்டை, வடலூருக்கு கல்விசார் பயணம் மேற்கொண்டனர்.



இந்த பயணத்தின் போது, விவசாயிகள் உற்பத்தியாளர் நிறுவனத்தின் (FPO) கட்டமைப்பு, செயல்பாடுகள், நிர்வாக அமைப்பு மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள் குறித்து அறிந்து கொள்ளும் வாய்ப்பு கிடைத்தது. நிறுவன தலைவர் செல்வகுமார் மற்றும் இயக்குநர் குழு உறுப்பினர்கள், FPO உருவாக்கம், அதன் வளர்ச்சி பயணம், விவசாயிகளுக்கான சேவைகள் மற்றும் நிறுவன செயல்பாட்டு அனுபவங்களை மாணவர்களுடன் பகிர்ந்து கொண்டனர். மேலும், நிறுவன வளாகம் மற்றும் அதன் செயல்பாடுகள் நேரடியாக பார்வையிடப்பட்டு, FPO-வின் நடைமுறை செயல்பாடுகள் குறித்த புரிதல் மாணவர்களுக்கு கிடைத்தது.




# விதைப்பரிசோதனையும் அதன் முக்கியத்துவமும்!

வேளாண்மையின் முதன்மையான இடுபொருளாக விதைகள் மிக முக்கிய பங்கு வகிக்கின்றன. நம் நாட்டில் வளர்ந்து வரும் மக்கள் தொகையின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்ய இன்றைய சூழலில் வேளாண் மற்றும் தோட்டக்கலைப் பயிர்களின் உற்பத்தியைப் பல மடங்கு பெருக்குவதோடு, உழவர்களின் வருமானத்தை மும்மடங்காக்க வேண்டியது மிகவும் அவசியம். இந்திய பொருளாதாரத்தின் முதுகெலும்பு வேளாண்மையேயாகும். வேளாண்மை சிறப்பாக இருக்க வேண்டுமானால் தேவையான இடுபொருட்கள், தரமான வகையில் உரிய நேரத்தில் கிடைத்தால் மட்டுமே சாத்தியம். இதில் விதை என்னும் இடுபொருள், உற்பத்தியை பெருக்குவதிலும், அதை நிலைப்படுத்துவதிலும் முக்கிய பங்கு வகிக்கின்றது. தரமான விதைகளே உயர் விளைச்சலுக்கு வழி வகுத்து பசுமை புரட்சிக்கு வித்திட்டது. எனவேதான், விதைகள், விளைச்சலின் ஆதாரமாகக் கருதப்படுகின்றது.

தரமான விதையானது இந்திய அரசால் நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச விதை சான்றளிப்புத் தரத்திற்கு ஏற்ற புறத்தூய்மை, மரபுத்தூய்மை, முளைப்புத்திறன் மற்றும் விதையின் நலத்துடன் கூடிய வீரியமும் கொண்டிருக்க வேண்டும். விதையின் புறத் தூய்மை என்பது குறிப்பிட்ட பயிர் விதையைத் தவிர பிற பயிர் விதைகள், களை விதைகள் மற்றும் இதர தேவையற்ற பொருட் களின் கலப்பு இல்லாமல் தூய்மையானதாக இருத்தல் வேண்டும். விதையின் மரபுத் தூய்மை என்பது விதைப் பயிரானது தாயாதிப் பயிரின் மரபியல் குணங்களை ஒத்திருக்க வேண்டும்.

முளைப்புத்திறன் என்பது நாம் விதைக்கும் விதையில் எவ்வளவு விதைகள் நன்கு முளைத்து நல்ல செடிகளை கொடுக்கின்றன என்பதைக் குறிக்கின்றது. இது மட்டுமல்லாது, விதைகள் பூச்சி, பூஞ்சாணங்களின் தாக்குதலின்றி நல்ல வீரிய செடிகளை உற்பத்தி செய்பவைகளாக இருத்தல் வேண்டும். விதை உற்பத்தி, விதைத் தரத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்தே இந்திய அரசு தரமான விதைகளை விவசாயிகளுக்கே விநியோகம் செய்ய குறைந்த பட்ச தரக்கட்டுபாட்டினை உருவாக்கி அதனை அமுல்படுத்த சட்டமும் இயற்றியுள்ளது.

விதைச்சான்றளிப்பு பிரிவிலிருந்து பெறப்படும் சான்று விதை மாதிரிகள், விதை ஆய்வு பிரிவிலிருந்து பெறப்படும் ஆய்வாளர்

விதை மாதிரிகள் மற்றும் விவசாயிகள், விதை விற்பனை யாளர்கள் மற்றும் விதை உற்பத்தியாளர்களிடமிருந்து பெறப்படும் பணி விதை மாதிரிகளும் அறிவிக்கை செய்யப்பட்ட விதை பரிசோதனை நிலையங்களில் பரிசோதனை செய்யப்படுகின்றன.

**முளைப்புத்திறன் சோதனை :** முளைப்புத்திறன் என்பது விதை உயிரும் வீரியமும் கொண்டு, கருமுளைவிட்டு பின்னர் வளர்ச்சிக்கு அத்தியாவசியமாக பாகங்கள் உருவாகி இயல்பான செடியாவதற் குரிய திறனே எனலாம். நல்ல முளைப்புத்திறன் கொண்ட விதைகளை விதைப்பதன் மூலம் வயலில் பயிர்கள் நிறைவான பயிர் எண்ணிக்கையில் செழித்து வளரும். ஆனால், அதே சமயம், முளைப்புத்திறன் குறைந்த எண்ணிக்கையில் பயிர்கள் வளர்ந்து விளைச்சல் பாதிக்கப்படும். விதைச்சட்டம் 1966 பிரிவு 7-ன்படி ஒவ்வொரு பயிருக்கும் மேற்கூறியவாறு குறைந்த அளவு முளைப்புத்திறன் நிர்ணயம் செய்து அறிவிக்கப்பட்டுள்ளது. முளைப்புத்திறன் சோதனையின் போது நாற்றுகளை இயல்பானது, இயல்பற்றது எனவும், முளைக்காத விதைகளை கடினமானது, உயிரற்றது எனவும் வகைப்படுத்தி சோதனையின் முடிவுகள் அறிவிக்கப்படுகின்றன.

| **பயிர்** | **குறைந்தபட்ச முளைப்புத்திறன் (சதவிகிதம்)** |
|---|---|
| மக்காச்சோளம் | 90 |
| *பார்லி, ஓட்ஸ், கோதுமை, கொண்டக்கடலை* | *85* |
| நெல், கொள்ளு, எள், சணப்பு | 80 |
| *சோளம், கம்பு, கேழ்வரகு, துவரை, உளுந்து, தட்டைப் பயறு, பாசிப்பயறு, பட்டாணி, பிரெஞ்சு பீன்ஸ், அவரை* | *75* |
| நிலக்கடலை, சூரியகாந்தி, ஆமணக்கு, சோயாபீன்ஸ், கத்திரி, தக்காளி, கீரை, முட்டைக்கோஸ், நூல்கோல், வெங்காயம், முள்ளங்கி, டர்னிப், கொத்தவரை, முருங்கை, கொளிஞ்சி, தக்கைப்பூண்டு | 70 |
| *பருத்தி, வெண்டை, காலிபிளவர், மல்லி* | *75* |
| பூசணி, தடியங்காய், பாகல், மிளகாய், புடலை, பீர்க்கு, சுரை, தர்பூசணி, பப்பாளி | 60 |

விதை முளைப்பு சோதனை



மணல் ஊடக முளைப்பு சோதனை | காகித முளைப்பு சோதனை | பெட்ரி தட்டு முளைப்பு சோதனை

**விதைப்பரிசோதனைக்கான விதை மாதிரி :** விதை பரிசோதனை யினை மேற்கொள்ள விதை விற்பனையாளர்கள், உற்பத்தி யாளர்கள், உழவர்கள் தங்களிடம் இருப்பில் உள்ள விதைக் குவியல்களில் இருந்து மாதிரிகள் எடுத்து, விதை பரிசோதனை நிலையத்திற்கு அனுப்பலாம். ஒவ்வொரு பயிருக்கும் மாதிரி எடுத்து அனுப்ப வேண்டிய அளவு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| **பயிர்** | **அனுப்ப வேண்டிய விதை மாதிரி அளவு (கிராமில்)** |
|---|---|
| நிலக்கடலை, மக்காச்சோளம் | 500 |
| *அவரை, பிரெஞ்சு பீன்ஸ்* | *450* |
| கொண்டைக்கடலை | 400 |
| *பருத்தி (பஞ்சு நீக்காதது)* | *350* |
| ஆமணக்கு, கொள்ளு, பட்டாணி, பாகல், புடலை | 250 |
| *வீரிய ஒட்டு பருத்தி (பஞ்சு நீக்காதது)* | *200* |
| துவரை, தட்டைப்பயறு, சோயா, பருத்தி (பஞ்சு நீக்கியது), பீர்க்கன், சோளம், உளுந்து, பரங்கி, பாசிபயறு, தர்பூசணி, | 150 |
| *கொத்தவரை, வெண்டை, பூசணி, சுரக்காய், சூரிய காந்தி, வீரிய ஒட்டு பருத்தி (பஞ்சு நீக்கியது), வெள்ளரி* | *100* |
| நெல், முள்ளங்கி, சணப்பு, பீட்ரூட், இதர கீரை வகைகள் | 50 |
| *கொத்தமல்லி* | *30* |
| கம்பு, ராகி, தக்கைப்பூண்டு, எள், வேலி மசால், பாலக்கீரை, புளிச்சகீரை | 25 |
| *கேரட், நூல்கோலி, காலிபிளவர், முட்டைக்கோஸ், வெங்காயம், கத்திரி, தக்காளி, மிளகாய்* | *10* |

மாதிரிகளை உரிய விபரங்களுடன் அனுப்ப வேண்டும்.

**தேவைப்படும் விபரங்கள் :** 1. விதை மாதிரி அனுப்புபவர் பெயர், 2. இருப்பிட முகவரி / பின்கோட்டுடன், 3. பயிர், 4. இரகம், 5. குவியல் எண்.

திருவாரூர் மாவட்ட விவசாயிகள் விதைப்பரிசோதனை மேற் கொள்ள விதைப்பரிசோதனை கட்டணமாக ரூ.80/- (ரூபாய் எண்பது மட்டும்) உடன் பெரியமில் தெரு, விஜயபுரம், திருவாரூர் என்ற முகவரியில் செயல்படும் விதைப்பரிசோதனை நிலையத்தை அணுகி பயன்பெறுமாறு அழைக்கப்படுகிறார்கள்.

இதனை திருவாரூர் மாவட்டத்திற்கான தஞ்சை சரக விதைப் பரிசோதனை அலுவலர், து.சிவவீரபாண்டியன், திருவாரூர் விதைப் பரிசோதனை நிலைய மூத்த வேளாண்மை அலுவலர் கா.புவனேஸ்வரி மற்றும் வேளாண்மை அலுவலர் ரா.அனந்தகுமார் ஆகியோர் தெரிவித்துள்ளார்கள்.

கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333

# பல்லுயிர் பெருக்கம் குறைவதால் மனித குலத்திற்கே பெரும் ஆபத்து - தெரியுமா?




உலகலாவிய அளவில் இந்தியாவின் சிறப்பே 'பல்லுயிரின் பாதுகாப்பான நாடு' என்பது தான். கடந்த சில ஆண்டு களாக அந்த நிலைமை தலைகீழாக மாறிவிட்டன. மரங்கள், செடிகள், கொடிகள், பாலூட்டிகள், ஊர்வன, பறப்பன நீர் மற்றும் நில வாழ் உயிரி னங்கள் அனைத்துமே வாழத்தகுதி யான நிலப்பரப்பை கொண்ட நாடாக இருந்த போதிலும் பல ஆண்டுகளாக தொடரும் மனித செயல் பாடுகள், பல்லுயிரின் பெருக்கத்தை அழித்து வருவது வேதனைக்குரிய விசயமாகும்.

**முதலில் பல்லுயிர் பெருக்கம் என்றால் என்ன?**

பூமியில் உள்ள அனைத்து விதமான தாவரங்கள், விலங்குகள், பூஞ்சைகள் மற்றும் நுண்ணுயிர்கள் ஆகியவற்றுக்கான இடை யிலான பன்முகத்தன்மையே பல்லுயிர் பெருக்கம் (BIO DIVERSITY) யாகும்.

**என்ன காரணங்களால் பாதிக்கப்படுகிறது?**

1) வனங்கள், காடுகள் விளைநிலங்களாக மாற்றுதல்

2) விளைநிலங்கள் பிளாட் (குடியிறுப்பாக) மாற்றுதல்

3) நகரமயமாக்கல்

4) கட்டுப்பாடற்ற மேய்ச்சல் முறைகள்

5) புதிய தொழிற்சாலைகள் உருவாக்கம்

6) வர்த்தக ரீதியிலான மர தொழிற்சாலைகள்

இவை தான் பல்லுயிர் பெருக்கத்திற்கு தடையாகவும், ஆபத்தாகவும் உள்ளது. இன்னும் நிறைய காரணங்கள் உள்ளன.

**பல்லுயிர் பெருக்கம் அவசியம் தானா?**

சுற்றுப்புற சூழல் அமைப்பிற்கு சமநிலைபடுத்த பல்லுயிர் பெருக்கம் அவசியம். அதே நேரத்தில் பல்லுயிர் இழப்பால் உணவு பாதுகாப்பு மற்றும் மனித வாழ்வில் தீவிர தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

இயற்கை வாழ்விடங்களை பாதுகாத்தால் பல்லுயிர் பெருக்கம் தானாகவே பெருகும்.

பல்லுயிர்களான தாவரங்கள் மற்றும் நுண்ணுயிர்கள் இருப்பதால் சுத்தமான காற்றையும் குறியீடுகளை நாம் அனுபவிக்க முடியும். விவசாயிகளின் நிலத்தில் மகரந்த சேர்க்கை எற்படுத்திட தேனீக்கள் உள்ளிட்ட பூச்சிகள் உதவிடுவதால் கூடுதலான விளைச்சல் கிடைக்கும். காடுகள் முதல் பெருங் கடல்கள் வரை ஆரோக்கியமாக இருக்க பல்லுயிர்களின் பெருக்கம் அவசியமாகும்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# விதைப்பண்ணைகளை
# வேளாண்மை இணை இயக்குனர் ஆய்வு

சேலம், ஜூன் 9

சேலம் வேளாண்மை இயக்குநர் கு.சீனிவாசன், வீரபாண்டி வட்டாரத்தில் எட்டிமாணிக்கம் பட்டி கிராமத்தில் முன்னோடி விவசாயி கிருஷ்ணன் வி.ஆர்.ஐ 10 இரக நிலக்கடலை விதைப்பண்ணை, சந்திரமோகன் வயலில் அமைக்கப்பட்ட வம்பன் 10, உளுந்து விதைப்பண்ணைகளை ஆய்வு செய்து உயரிய தொழில்நுட்பங்களை பயன்படுத்தி அதிக மகசூல் எடுக்க கேட்டுகொண்டார்.



இதைத்தொடர்ந்து வேளாண்மை விரிவாக்க மையத்தில் உள்ள நிலக்கடலை, உளுந்து, பச்சைப்பயறு, தட்டைப்பயறு

உட்பட வேளாண் இடுபொருட்கள் விவரங்கள் சரியாக உள்ளதா என்று பார்வையிட்டார். மேலும் விவசாயிகளை சந்தித்து விவசாய அடையாள எண் பதிவு, பி.எம் கிசான் கவுரவ நிதி, விளைநிலங்களை காப்போம், இராசாயன உர பயன்பாட்டை குறைக்க விழிப்புணர்வு ஏற்படுத்த அனைத்து அலுவலர்களை கேட்டுக்கொண்டார்.

இந்த ஆய்வில் வேளாண்மை உதவி இயக்குநர் பா.கார்த்திகாயினி உதவி விதை அலுவலர் ப.மூர்த்தி, உதவி வேளாண்மை அலுவலர், கிடங்கு மேலாளர் மற்றும் அட்மா திட்ட அலுவலர்கள் ஆகியோர் உடன் இருந்தனர்.



# தோட்டக்கலை பயிர்களில் நாற்றங்கால் மேலாண்மை மற்றும் நாற்றுகள் உற்பத்தி செய்யும் முறைகள் குறித்த விவசாயிகள் பயிற்சி



அரியலூர், ஜுன் 9

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் வட்டார வேளாண் துறை மூலம் செயல் படுத்தப்பட்டு வரும் அட்மா திட்டத்தின்கீழ் தோட்டக்கலை பயிர்களில் நாற்றங்கால் மேலாண்மை மற்றும் நாற்றுகள் உற்பத்தி குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி முத்துசேர்வாமடம் கிராமத்தில் நடைபெற்றது.

வட்டார வேளாண் உதவி இயக்குநர் மகேந்திர வர்மன் தலைமை வகித்தார். கிரீடு வேளாண் அறிவியல் நிலையத்தின் தொழில்நுட்ப வல்லுநர் ராஜா ஜோஸ்லின் விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தார். கத்தரி, மிளகாய், பாகல் போன்ற காய்கறி நாற்றுக்களை குழித்தட்டு முறையில் உற்பத்தி செய்யும் முறைகள், அவற்றை பராமரிக்கும் முறைகள் குறித்து விளக்கினார். பின் நடவு வயது, அவற்றை நடவு செய்ய நடவு வயல் தயார் செய்தல், அடியுரமிடுதல், உயிர் உரங்கள் மற்றும் நுண் சத்துக்கள் இடும் முறைகள், வளர்ச்சி ஊக்கிகள் தெளிக்கும் முறைகள் குறித்து விளக்கி விவசாயிகளின் சந்தேகங்களுக்கு பதிலளித்தார். எலுமிச்சை கன்றுகள் உற்பத்தி, தென்னங் கன்றுகள் உற்பத்தி மற்றும் பராமரிப்பு முறைகள் குறித்தும் விளக்கினார். மேலும் ஒட்டு கட்டும் முறையில் நாற்றுகள் உற்பத்தி செய்யும் முறை, அங்கக முறை பூச்சி மற்றும் நோய் கட்டுப்பாடு முறைகளையும் விளக்கினார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் மீனாட்சி அட்மா திட்ட செயல்பாடுகள் குறித்தும் விவசாயி தனித்துவ அடையாள எண் பெறுவதன் அவசியம் குறித்தும் விளக்கினார். காய்கறிகள் சாகுபடி மேற்கொண்டு வரும் விவசாயிகள் தங்களது சாகுபடி அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர். பயிற்சியில் முத்துசேர்வாமடம் கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகள் மற்றும் பண்ணை மகளிர் கலந்து கொண்டனர்.

# கிசான் கோஸ்திஸ் வயல் தின விழா நடந்தது

ராணிப்பேட்டை, ஜூன் 9

ராணிப்பேட்டை மாவட்டம், ஆற்காடு வட்டம், குக்குண்டி கிராமத்தில் வேளாண்மை துறை ஆத்மா திட்டத்தின் கீழ் கிசான் கோஸ்திஸ் வயல் தின விழா நடைபெற்றது.




இதில் விரிஞ்சிபுரம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் இருந்து பேராசிரியர் சித்ரா, தலைமையேற்று விவசாயிகளுக்கு நெல் சாகுபடி தொழில்நுட்பம் குறித்தும் நெல்லி ஒருங் கிணைந்த பூச்சி மேலாண்மை ஒருங்கிணைந்த நோய் மேலாண்மை ஒருங்கிணைந்த களை மேலாண்மை மற்றும் காய்கறி பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மேலாண்மை குறித்தும் விவசாயிகளுக்கு எடுத்து கூறினார்.

பின்னர் ஆற்காடு தோட்டக்கலை உதவி இயக்குனர் மணிகண்டன், கலந்து கொண்டு தோட்டக்கலைத் துறை சார்ந்த திட்டங்கள் குறித்து முழுமையாக விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார். பின்னர் வேளாண்மை துறை சார்பில் துணை வேளாண்மை அலுவலர் கண்ணன், கலந்து கொண்டு மத்திய அரசு மற்றும் மாநில அரசு திட்டங்கள் குறித்து விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார்.

இதில் ஆத்மா திட்ட அலுவலர் ராஜேஷ் மற்றும் சக்திவேல், உதவி வேளாண்மை அலுவலர் வையாபுரி கலந்து கொண்டு நிகழ்ச்சிகளை சிறப்பு ஏற்பாடு செய்தனர். இதில் 150க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# விளை நிலம் பாதுகாப்பு இயக்கம் விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது



சேலம், ஜுன் 9

வேளாண்மை துறையின் மூலம் இந்திய அரசாங்கம் விளை நிலங்களை பாதுகாப்போம் இயக்கம் 'கேத் பச்சாவோ அபியான்' (Khet Bachao Abhiyan) என்ற நாடு தழுவிய விழிப்புணர்வு இயக்கத்தை 01 ஜுன் 2026 முதல் 30 ஜுன் 2026 வரை செயல்படுத்துகிறது.

சேலம மாவட்டம், சேலம் வட்டாரம், கன்னங்குறிச்சியில் மண் வளம் காப்போம்! இயற்கை வேளாண்மையை வளர்ப்போம்! சமநிலை உரப் பயன்பாட்டை பின்பற்றுவோம்! நிலையான விவசாயத்தை உருவாக்குவோம் என்ற நோக்கத்துடன் விளைநிலம் காப்போம் இயக்கம் விழிப்புணர்வு முகாம் நடத்தப்பட்டது. இந்த முகாமிற்கு சேலம் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் சீனிவாசன், தலைமை தாங்கி உழவர் அடையாள எண் முக்கியத்துவம் பற்றி விவசாயிகளுடன் கலந்துரையாடினார்.

ஏற்காடு தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம் பேராசிரியர் சாரா பர்வீன் பானு, நீர் மாசுபாடு கட்டுப்படுத்தும் தொழில்நுட்பங்களை தெரிவித்தார். சந்தியூர் வேளாண்மை அறிவியல் நிலையம் இணை பேராசிரியர் இளங்கவி, இரசாயன உரங்களின் பயன்பாட்டை குறைத்து ஒருங்கிணைந்த உர மேலாண்மை முறைகளை கடைபிடிக்குமாறு அறிவுறுத்தினார்.

சேலம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் கவிதா, நீர் பாதுகாப்பு மற்றும் சிக்கனமான நீர் பயன்பாடு காலநிலை மாற்றத்தை தாங்க கூடிய செலவைக் குறைக்கும் வேளாண்மை சாகுபடி தொழில்நுட்பங்களை கலந்துரையாடினார். விதைச் சான்றழிப்பு மற்றும் அங்ககச்சான்றளிப்பு உதவி இயக்குநர் நவநீதகிருஷ்ணன், இயற்கை விவசாயம் பற்றியும் உயிர்மசான்று பெறும் நடைமுறைகள் பற்றியும் தெரிவித்ததர். சேலம் வேளாண்மை அலுவலர் சந்திரன், உயிர் உரங்கள் மற்றும் பசுந்தாள் உரங்களின் நன்மைகள் பற்றி தெரிவித்தார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் மண் பரிசோதனை செய்வது விதை நேர்த்தி செய்வது பற்றி செயல் விளக்கம் செய்து காண்பித்தார்.

# பயறுவகை பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி



மதுரை, ஜூன் 9

மதுரை மாவட்டம், சேடபட்டி வட்டாரத்தில், அனுப்பப்பட்டி கிராமத்தில் வேளாண்மைத்துறை – வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமைத்திட்டத்தின் கிழ் (ATMA-2026-27) பயறுவகை பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி 09.06.26 அன்று நடத்தப்பட்டது.

வேளாண்மை உதவி இயக்குநர் கா.மணிமேகலை கலந்து கொண்டு மத்திய மற்றும் மாநில திட்டங்கள் பற்றியும், உயர் விளைச்சல் இரகங்கள் பற்றியும் எடுத்துகூறி விதை தேர்வு, விதை நேர்த்தி, விதைக்கும் முறை, நிலம் சிரமைப்பு பற்றியும் எடுத்து கூறினார். கேத் பச்சோ அபியான் திட்டத்தின் கிழ் காளிமுத்து, இயற்கை விவசாயி கூறுகையில் சமச்சீரான உரபயன்பாட்டை மேற்கொள்வதன் மூலம் நிலையான வேளாண்மையை ஊக்குவித்தல் மற்றும் பஞ்சகாவ்யம், மீன் கரைசல், இஞ்சி பூண்டு கரைசல், மோர் கரைசல் மற்றும் திரவ அசோஸ்பைரில்லம், ரைசோபியம் ஆகிய இயற்கை உரங்களை பயன்படுத்தி பூச்சி, நோய் தாக்குதலின்றி இயற்கை முறையில் அதிக மகசூல் பெற்றிடலாம்.

உதவி வேளாண்மை அலுவலர் ஸ்ரீனிவாசன், பேசுகையில் மண்பரிசோதனை செய்வதால் ஏற்படும் நன்மைகள் பற்றியும், மண் எடுக்கும் வழிமுறைகள் பற்றியும் விளைபொருட்களை மதிப்புக்கூட்டி விற்பனை செய்திட வேண்டும். விவசாயிகள் தொழில் முனைவோர்களாக மாறவேண்டும் என்று கூறினார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் ச.கணேசராஜா கலந்து கொண்டு நீர் மற்றும் களை மேலாண்மை பற்றியும், சரியான பயிர் இடைவெளி பயிர் எண்ணிக்கை உரமேலாண்மை தொழில்நுட்பங்கள் பற்றியும் எடுத்துக்கூறப்பட்டது.

உதவி தொழில்நுட்ப மேலாளர் சத்யா, விவசாயிகளுக்கு தனித்துவமான அடையாள அட்டை பதிவு செய்வது பற்றியும் எடுத்துக்கூறி ஏற்பாடுகளை செய்தனர். வட்டாரத் தொழில்நுட்ப மேலாளர் ச.கணேசராஜா நன்றி கூறினார்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# அட்மா திட்டத்தின் கீழ் எண்ணெய் வித்துப் பயிர் குறித்த விவசாயிகள் பயிற்சி



அரியலூர், ஜூன் 9

அரியலூர் மாவட்டம், தா.பழூர் வட்டாரம், வேளாண்மைத் துறையின் கீழ் செயல்பட்டுவரும் அட்மா திட்டத்தில் விவசாயிகளுக்கு வெண்மான்கொண்டான் கிராமத்தில் எண்ணெய்வித்து பயிர்களின் ஒருங்கிணைந்த மேலாண்மை முறைகள் குறித்த விவசாயிகள் பயிற்சி நடைப்பெற்றது. இப்பயிற்சியில் கிரீடு வேளாண் அறிவியல் மையத்தின் தொழில்நுட்ப வல்லுநர் விக்னேஷ்வரன், கலந்து கொண்டு விவசாயிகளிடத்தில் சிறப்புரை ஆற்றி பேசுகையில், எண்ணெய்வித்துப் பயிர்களில் ஒருங்கிணைந்த உர நிர்வாகத்தை கடைப்பிடித்து குறைந்த செலவில் அதிக விளைச்சலை பெறும் வழிமுறைகள் குறித்து எடுத்துக்கூறினார். மேலும் எண்ணெய் வித்துப்பயிர்களில் விதை நேர்த்தி செய்வதின் அவசியம் குறித்தும் ஒருங்கிணைந்த முறையில் உர நிர்வாக முறையினை பின்பற்றி மண் வளம் மற்றும் உடல் நலத்தை பாதுகாக்கலாம் என விதைப்பு முதல் அறுவடை வரை உள்ள சாகுபடி தொழில்நுட்பங்களை விரிவாக எடுத்துகூறினார். இப்பயிற்சியில் விவசாய நிலத்தை பாதுகாப்பு இயக்கம் குறித்த விழிப்புணர்வு முகாம் நடத்தப்பட்டது. இம்முகாமில் கோடை உழவு, பஞ்சகாவியா தயாரித்தல், ஜீவாமிர்தம், மீன் அமிலம் மற்றும் மஞ்சள் வண்ண அட்டை, இனகவர்ச்சிபொறி இவற்றின் பயன்கள் குறித்தும் இயற்கை வேளாண்மை மற்றும் மண்பரிசோதனை செய்து உரமிடுதல், பசுந்தாள் உரப்பயிர்கள் மற்றும் உயிர் உரங்களை பயன்படுத்தும் போது இரசாயன உர பயன்பாட்டை குறைத்து மண்வளத்தை மேம்படுத்தலாம் என்று விரிவாக விளக்கி கூறினார். முன்னதாக அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் சகாதேவன் வரவேற்று பேசுகையில், வேளாண்மை துறைகளில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்தும் எடுத்துகூறினார். மற்றும் விவசாயிகள் அனைவரும் வேளாண்மைத்துறை மற்றும் சகோதரதுறைகளின் திட்டங்களைப் பெற விவசாயிகள் தனித்துவ அடையாள எண பெற வேண்டியது அவசியம் என கூறினார். அட்மா திட்டங்கள் குறித்து எடுத்துக்கூறினார். இப்பயிற்சியில் உதவி தொழில்நுட்ப மேலாளர் லெட்சுமி மற்றும் உதவி வேளாண்மை அலுவலர் தினேஷ் மற்றும் வெண்மான்கொண்டான் கிராம விவசாய பெருமக்கள் திரளாக கலந்துக்கொண்டனர்.

# வேளாண்மையில் நிரந்தர உற்பத்தி மற்றும் அதிக விளைச்சலுக்கு விதையின் தரம் அறிந்து விதைப்பீர்!

வேளாண்மையின் நிரந்தர உற்பத்தி மற்றும் அதிக விளைச்சலுக்கு விதை தான் அடிப்படை இடுப்பொருளாகும். உழவர்களுக்கு தரமான விதைகள் கிடைக்க செய்வதற்காக தமிழ்நாடு அரசு விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு துறையின் கீழ் விதைப்பரிசோதனை நிலையம் செயல்பட்டு வருகிறது.

இவற்றுள், நாகப்பட்டினம் மற்றும் மயிலாடுதுறை மாவட்ட விவசாயிகள் விதைத் தரத்தை அறிந்து கொள்ளும் வகையில் நாகப்பட்டினம் மாவட்டம் வெளிப்பாளையத்தில் 15. காளியம்மன் கோவில் தெருவில் அமைந்துள்ள விதைப்பரிசோதனை நிலைய அலுவலகம் செயல்பட்டு வருகிறது.

ஆதலால் விவசாயிகள் மற்றும் விதை விற்பனையாளர்கள் தங்களிடம் இருப்பு உள்ள விதைகளை நாகப்பட்டினம் விதைப் பரிசோதனை நிலையத்தில் பரிசோதித்து விதைக்க வேண்டும்.

விதையின் தரத்தை அறிய விதை பரிசோதனை செய்யப்படுகிறது. இப்பரிசோதனையில் விதை முளைப்புத்திறன், புறத்தூய்மை, ஈரப்பதம் மற்றும் பிறரக கலப்பு கண்டறியப்பட்டு முடிவுகள் அறிவிக் கப்படுகின்றன. நாகப்பட்டினம் விதைப்பரிசோதனை நிலையத்தில் சான்று விதை, ஆய்வாளர் விதை மாதிரிகள் மட்டுமின்றி விவசாயி களிடமிருந்தும், விதை விற்பனையாளர்களிடமிருந்தும் விதை உற்பத்தியாளர்களிடமிருந்தும் பெறப்படும் பணி விதை மாதிரிகளும் ஆய்வு செய்யப்படுகின்றன.

எனவே, விவசாயிகள், விதை விற்பனையாளர்கள் மற்றும் விதை உற்பத்தியாளர்கள் தங்கள் கைவசம் உள்ள விதைகளை விதைப் பதற்கு முன் தரமறிய, ஒருவிதை மாதிரிக்கு ரூ.80/- மட்டும் கட்டணம் செலுத்தி தரமறிந்து விதைப்பீர் என்று நாகப்பட்டினம் மாவட்டத்திற்கான விதைப்பரிசோதனை அலுவலர் து.சிவவீர பாண்டியன் மற்றும் மாவட்ட மூத்த வேளாண்மை அலுவலர் அ.அமுதாதேவி, வேளாண்மை அலுவலர் செ.பிரசன்னா விவசாயிகளை கேட்டுக் கொள்கிறார்கள்.

# நெற்பயிரில் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை குறித்த விவசாயிகள் பயிற்சி




மதுரை, ஜுன் 9

மதுரை மாவட்டம், மதுரை மேற்கு வட்டாரம் வேளாண்மைத் துறை வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (ATMA) திட்டத்தின் கீழ் மாலைப்பட்டி கிராமத்தில் 09.06.26 அன்று நெற்பயிரில் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி நடைபெற்றது.

இப்பயிற்சிக்கு மதுரை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் கே.பி.முருகேசன், மத்திய அரசின் திட்டமான கேச் பச்சாவோ அபியான் விளை நிலம் காப்போம் இயக்கம் திட்டத்தின் கீழ் இயற்கை விவசாயத்தை ஊக்குவித்தல், இரசாயன உரப்பயன்பாட்டினை குறைத்து மண்வளத்தை மேம்படுத்துதல், திரவ உயிர் உரங்கள் மற்றும் மண்புழு உரங்களை பயன்படுத்த அறிவுறுத்தினார். மதுரை, வேளாண்மை துணை இயக்குநர் (மாநில திட்டம்) த.மேரி ஜரின் ஆக்னிட்டா, மண் மாதிரி எடுத்து ஆய்வு செய்து மண் ஆய்வு முடிவுப்படி உரமிடல், உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகள் மற்றும் உயிர் உரங்கள் பயன்பாடு, விவசாயிகளின் தனித்துவ அடையாள எண் பதிவு செய்தல் குறித்து விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். மதுரை மேற்கு வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ப.பாலமுருகன், விளை நிலம் பாதுகாப்போம் இயக்கம், துறை சார்ந்த திட்டங்கள் மற்றும் மானிய விபரங்கள் குறித்து விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது. மேற்கண்ட பயிற்சிக்கு தொழில்நுட்ப உரை வழங்குவதற்கு ஓய்வு பெற்ற வேளாண்மை இணை இயக்குநர் சுருளிமலை, நெற்பயிரில் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை, மற்றும் நெல் பயிரில் ஊடு பயிர் சாகுபடி முறை குறித்த விளக்கம் அளித்தார்.

அசோஸ்பைரில்லம் மற்றும் சூடோமோனாஸ் போன்ற உயிர் உரங்கள் பயன்பாடுகள் குறித்த விளக்கம் அளித்தார். வேளாண் வணிகத்துறையின் திட்டங்கள், மானிய விபரங்கள் மற்றும் விவசாயிகளின் தனித்துவ அடையாள எண் பதிவு செய்தல் குறித்து விவசாயிகளுக்கு உதவி வேளாண்மை அலுவலர் சண்முகசுந்தரபாண்டி, எடுத்துரைத்தார். மேலும் இப்பயிற்சிக் கான ஏற்பாடுகளை வட்டாரத் தொழில்நுட்ப மேலாளர் S.ராஜசேகர், உதவி தொழில்நுட்ப மேலாளர் பாலமுருகன், S.ஸ்ரீஹரிணி மற்றும் பயிர் அறுவடை பரிசோதனை பணியாளர் கோ.முரளிதரன் ஆகியோர் செய்திருந்தனர்.



# சின்னமணவாரணப்பள்ளி கிராமத்தில் நெல் பயிரில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்த விவசாயிகளுக்கு பயிற்சி




கிருஷ்ணகிரி, ஜூன் 9

கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனப்பள்ளி வட்டாரத்தில் வேளாண்மைத் துறை மாநில விரிவாக்க திட்டங்களின் உறுதுணை சீரமைப்பு திட்டத்தின் (அட்மா) கீழ் உள் மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி சின்னமணவாரணப்பள்ளி கிராமத்தில் வேப்பனப்பள்ளி வேளாண்மை உதவி இயக்குநர் சிவநதி தொடங்கி நெல் பயிரில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்து விளக்கம் அளித்தார்.

இந்த பயிற்சியின் போது, வேளாண்மை அறிவியல் மையம், எழுமிச்சங்கிரி, திட்ட ஒருங்கிணைப்பாளர் / தலைவர், சுந்தர்ராஜ், நெல் பயிரில் விதை நேர்த்தி செய்வதன் நன்மைகள், திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்பங்கள், கோனோவீடர் மூலம் களை எடுத்தல், ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் மேலாண்மை குறித்து விளக்கி கூறினார். துணை வேளாண்மை அலுவலர் ராமநாதன், மண் மாதிரி எடுத்தல் மற்றும் மண் ஆய்வு பரிந்துரையின் படி உரம் இடுதல், இயற்கை வேளாண்மை, உயிர் உர விதை நேர்த்தி செய்தல், தரமான வீரிய ரகங்களை தேர்வு செய்ய வேண்டும், விதைகளை உயிர் பூஞ்சாண கொல்லி சூடோமோனாஸ், உயிர் உரங்கள் அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டீரியா அல்லுது 100 மிலி திரவ உயிர் உரங்கள் தேவையான விதையுடன் ஆற வைத்த அரிசி கஞ்சி சேர்த்து நன்கு கலந்து விதை நேர்த்தி செய்யவும் மற்றும் சொட்டுநீர் பாசன திட்டத்தின் நன்மைகள் பற்றி தெளிவாக கூறினார். இந்த பயிற்சியில் விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர். கலந்துக்கொண்ட விவசாயிகளுக்கு தொழில்நுட்ப கையேடு மற்றும் துண்டு பிரசுரம் வழங்கப்பட்டது. அட்மா வட்டார தொழில்நுட்ப மேலாளர் கவிதா அட்மா திட்ட செயல்பாடுகள் மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் பாரதிராஜா மற்றும் பிரியா உழவன் செயலியை பயன்படுத்தும் முறைகள் பற்றி விளக்கமளித்தார்.

**Rithvik Pipe**

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்**
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

POWERGRID BHEL

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# பாசன கால்வாய்கள் தூர்வாரும் பணிகள் தீவிரம்

## குறுவை மற்றும் சம்பா சாகுபடிக்கான முக்கிய முன்னெடுப்பு

தமிழ்நாட்டில் வேளாண்மை பெரும்பாலும் நீர்ப்பாசனத்தை சார்ந்தே உள்ளது. குறிப்பாக காவிரி டெல்டா மாவட்டங்களில் நெல் சாகுபடி வெற்றிகரமாக நடைபெறுவதற்கு பாசன கால்வாய்களின் செயல்திறன் மிகவும் அவசியமாகும். இதனை கருத்தில் கொண்டு, தமிழக அரசு மற்றும் வேளாண் பொறியியல் துறை இந்த ஆண்டு சுமார் 2,375 கிலோ மீட்டர் நீளமுள்ள C மற்றும் D வகை பாசன கால்வாய்களை தூர்வாரும் பணிகளை தீவிரமாக மேற்கொண்டு வருகின்றன.

**பாசன கால்வாய்களின் முக்கியத்துவம்**

பாசன கால்வாய்கள் அணைகள், நீர்த்தேக்கங்கள் மற்றும் ஆறுகளிலிருந்து விவசாய நிலங்களுக்கு தண்ணீரை கொண்டு செல்லும் முக்கிய கட்டமைப்புகளாகும். காலப்போக்கில் மண் படிவு, களைகள் வளர்ச்சி மற்றும் குப்பைகள் தேக்கம் போன்ற காரணங்களால் கால்வாய்களின் நீரோட்ட திறன் குறைகிறது. இதனால் தண்ணீர் விநியோகத்தில் தாமதம் மற்றும் வீணாகுதல் ஏற்படுகிறது.

**தூர்வாரும் பணிகளின் நோக்கம்**

தற்போது மேற்கொள்ளப்படும் தூர்வாரும் பணிகளின் முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு :

- கால்வாய்களில் தேங்கியுள்ள வண்டல் மண் மற்றும் குப்பை களை அகற்றுதல்.
- நீரோட்ட திறனை அதிகரித்தல்.
- நீர் இழப்பைக் குறைத்தல்.
- விவசாய நிலங்களுக்கு சீரான நீர் விநியோகத்தை உறுதி செய்தல்.
- குறுவை மற்றும் சம்பா சாகுபடிகளுக்குத் தேவையான நீர் கிடைப்பை மேம்படுத்துதல்.

**C மற்றும் D வகை கால்வாய்கள் என்றால் என்ன?**

நீர்ப்பாசன அமைப்பில் முக்கிய கால்வாய்களிலிருந்து கிளையாக செல்லும் சிறிய விநியோக கால்வாய்கள் C மற்றும் D வகை

கால்வாய்கள் என அழைக்கப்படுகின்றன. இவை நேரடியாக விவசாய நிலங்களுக்கு தண்ணீரை கொண்டு செல்வதால், அவற்றின் பராமரிப்பு மிகவும் முக்கியமானதாகும்.

**குறுவை மற்றும் சம்பா சாகுபடிக்கு கிடைக்கும் நன்மைகள் :**

**தூர்வாரும் பணிகள் நிறைவடைந்தால் :**

- குறுவை பருவ நெல் சாகுபடிக்கு தண்ணீர் சரியான நேரத்தில் கிடைக்கும்.
- சம்பா பருவத்தில் நீர் பற்றாக்குறை குறையும்.
- நிலத்தடி நீர் மீள்நிரப்பு அதிகரிக்கும்.
- விவசாய உற்பத்தித் திறன் மேம்படும்.
- பயிர் சேதங்கள் குறையும்.

**வேளாண் பொறியியலின் பங்கு :** இந்தப் பணிகளை திட்டமிடுதல், இயந்திரங்கள் மூலம் தூர் வாருதல், நீரோட்ட கண்காணிப்பு மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் அனைத்தும் வேளாண் பொறியியல் துறையின் முக்கிய பொறுப்புகளாகும். நவீன அகழ்வாராய்ச்சி இயந்திரங்கள், GPS கண்காணிப்பு மற்றும் நீர் மேலாண்மை தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்படுவதன் மூலம் பணிகள் வேகமாகவும் திறம்படவும் மேற்கொள்ளப்படுகின்றன.

**எதிர்கால நோக்கு :** காலநிலை மாற்றம் மற்றும் மழை மாறுபாடுகள் அதிகரித்து வரும் நிலையில், பாசன கால்வாய்களின் பராமரிப்பு மற்றும் நீர் மேலாண்மை நடவடிக்கைகள் மிகவும் அவசியமாகியுள்ளன. இந்த தூர்வாரும் பணிகள் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பாதுகாப்பதுடன், தமிழ்நாட்டின் உணவுப் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும் முக்கிய நடவடிக்கையாகும்.

**முடிவுரை**

தமிழக வேளாண் பொறியியல் துறையால் மேற்கொள்ளப்படும் 2,375 கிலோமீட்டர் நீளமுள்ள C மற்றும் D வகை பாசன கால்வாய்களின் தூர்வாரும் பணிகள், குறுவை மற்றும் சம்பா சாகுபடிகளுக்கான நீர் விநியோகத்தை மேம்படுத்தும் முக்கிய திட்டமாகும். இந்நடவடிக்கை நீர் வளங்களை திறமையாக பயன்படுத்துவதற்கும், நிலையான வேளாண்மை வளர்ச்சியை உறுதி செய்வதற்கும் பெரும் பங்காற்றும்.

கட்டுரை ஆசிரியர் : ***Er.S.சுகுமார் M.E., உதவி பேராசிரியர், வேளாண்மைப் பொறியியல் துறை, நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, திருச்சி. மின்னஞ்சல் : sukumarsubramani2002@gmail.com.***



# நல்ல மகசூல் பெற எலுமிச்சை சாகுபடி செய்ய தொழில்நுட்பம் பயிற்சி



விருதுநகர், ஜூன் 9

விருதுநகர் மாவட்டம், விருதுநகர் வட்டாரத்தில் உள்ள மீசலூர் கிராமத்தில் தமிழ்நாடு அரசு வேளாண்மை துறை மூலம் வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமை விரிவாக்க சீரமைப்பு திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு எலுமிச்சை சாகுபடி செய்ய தொழில்நுட்பம் பயிற்சி வழங்கப்பட்டது.

உழவர் பயிற்சி மையத்தின் வேளாண்மைத் துணை இயக்குநர் லதா, தலைமை தாங்கி பயிற்சி துவக்கி வைத்தார். இதில் வேளாண்மை துறை, தோட்டக்கலைத் துறை, உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகம் அலுவலர்களும் கலந்து கொண்டு விவசாயிகள் சந்தித்து, புதிய தொழில்நுட்பங்கள், சிறந்த விவசாய முறைகள், பயிர் மேலாண்மை பற்றி கலந்துரை யாடினர். மண் ஆரோக்கியத்தைப் பாதுகாத்தல், இரசாயனப் பயன்பாடுகளைக் குறைத்தல் மற்றும் நிலையான, அறிவியல் பூர்வமான விவசாய முறைகளை ஊக்குவித்தல் ஆகிய நோக்கங்களுக்காக கேத்பச்சாவ் அபியான் விழிப்புணர்வு பிரச்சாரம் நடத்தப்பட்டது.

உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வக வேளாண்மை அலுவலர் கா.அரிபுத்திரன், எலுமிச்சை சாகுபடி செய்ய தொழில்நுட்ப பயிற்சி அளித்தார்.

● எலுமிச்சை நடவு செய்ய சுமார் 2 மீட்டர் ஆழத்துக்கு மண்கண்டம் இருக்க வேண்டும். நல்ல வடிகால் வசதியுள்ள செம்மண் கலந்துள்ள தோட்டக்கால் நிலங்களிலும், களிமண் இல்லாத மணல் பாங்கான தோட்டக்கால் நிலங்களிலும் எலுமிச்சை செழிப்பாக வளரும்.

● எலுமிச்சையை ஜூலை முதல் டிசம்பர் வரை நடவு செய்ய வேண்டும். ஒரு நாற்றுக்கு 5 மீட்டர் சுற்றளவில் இடைவெளியை விடவேண்டும். அப்படி நடும் போது ஒரு ஏக்கருக்கு 160 செடிகள் நடவு செய்யலாம்.

● எலுமிச்சை நடவு செய்ய குழியை 75 செ.மீ. சுற்றளவு உள்ளவாறு தோண்ட வேண்டும். நன்கு வளரும் வரை நீர் பாய்ச்சுவது அவசியம். சுமார் 7 முதல் 10 நாள்களில் நீர்ப் பாய்ச்சுவது போதுமானது. வேர்பாகத்தில் நீர் தேங்குவதைத் தவிர்க்க வேண்டும்.

● தழைச்சத்து 2 பாகங்களாக மார்ச், அக்டோபர் மாதங்களில் இட வேண்டும். தொழுஉரத்தை முதல் வருடத்துக்கு 10 கிலோவும், ஆண்டு தோறும் 5 கிலோவும் அதிகரிக்க வேண்டும். தழைச்சத்து முதல் வருடம் 200 கிராமில் தொடங்கி ஆண்டுக்கு 100 கிராம் அளவில் சேர்த்து இடவேண்டும். மணிச்சத்து, சாம்பல் சத்தை ஆண்டுக்கு 100 கிராம் அளவில் போட்டு, ஆண்டு தோறும் 40 கிராம் வரை கூடுதலாகச் சேர்க்க வேண்டும். உரங்களை இடும் போது மரத்தில் இருந்து 70 செ.மீ. தள்ளி மண்ணில் போட்டு கொத்தி விடவேண்டும்.

● புதிய துளிர் வரும் போது துத்தநாக சல்பேட் 100 லிட்டர் தண்ணீருக்கு 500 கிராம் கலந்து அந்தக் கரைசலை மார்ச், ஜூலை, அக்டோபர் மாதங்களில் தெளிக்க வேண்டும். செடியை 45 செ.மீ. உயரம் வரை கிளைகளின்றி நேராக வளரவிட வேண்டும்.

● எலுமிச்சை செடியின் ஊடுபயிராக அவரை குடும்பத்தைச் சேர்ந்த பயிர்கள், காய் வகைகளை மரங்கள் காய்ப்புக்கு வரும் காலம் வரை கூடுதலாகப் பயிரிட்டு பயன்பெறலாம்.

● காய்பிடிப்பை அதிகப்படுத்த, பிஞ்சு காய்கள் உதிர்வதைத் தடுக்க பயிர் வளர்ச்சி ஊக்கி என்.ஏ.ஏ. 30 பி.பி.எம். என்ற மருந்தை 30 மில்லி கிராம் அளவில் தெளிக்க வேண்டும்.

● எலுமிச்சை மரத்தை இலை துளைப்பான், சாறு உறிஞ்சும் பூச்சி, பழ அந்துப்பூச்சி, குருத்து துளைப்பான், தண்டு துளைப்பான், பழ ஈ, நூற்புழு ஆகிய பூச்சிக்கள் தாக்கும்.

● இலை துளைப்பானைக் கட்டுப்படுத்த, மானோகுரோட் டோபாஸ் 1 லிட்டர் தண்ணீருக்கு 15 மில்லி அளவில் கலந்து தெளிக்க வேண்டும்.

● சாறு உறிஞ்சும் பூச்சியைக் கட்டுப்படுத்த வெள்ளை ஈக்கு குயினைல்பாஸ் ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 மில்லி அளவு கலந்து தெளிக்க வேண்டும்.

● கறுப்பு ஈக்கு மானோகுரோட்டோபாஸ் ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2.5 மில்லி கிராம் கலந்து தெளிக்க வேண்டும்.



● அசுவினி பூச்சிக்கு மானோ குரோட்டோபாஸ் ஒரு லிட்டர் தண்ணீருக்கு 1 மில்லி கிராம் கலந்து தெளிக்க வேண்டும்.

● சிகப்புச் சிலந்தி பூச்சிக்கு நனையும் கந்தகத்தூளை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 கிராம் அளவில் கலந்து தெளிக்க வேண்டும்.

● குருத்துத் துளைப்பான் கட்டுப்படுத்த மானோகுரோட்டோ பாஸ் மருந்தை ஒரு லிட்டருக்கு ஒரு மில்லி லிட்டர் என்ற அளவில் கலந்து தெளிக்க வேண்டும்.

● தண்டு துளைப்பான் புழு தாக்கப்பட்ட கிளைகளை கவாத்து செய்ய வேண்டும்.

● நூற்புழு பாதித்த ஒரு மரத்தை கார்போபியூரான் 3 ஜி 750 கிராம் அளவுக்கு இட்டு இப்பூச்சிகளைக் கட்டுப்படுத்தலாம்.

இயற்கை உரங்கள் மற்றும் உயிர் உரங்களை பயன் படுத்துவதால், மண்வளம் மேம்படுகிறது, விளைச்சல் அதிகரிக்கிறது, மற்றும் நீண்டகால நிலத்தின் ஆரோக்கியம் பாது காக்கப்படுகிறது. மண்ணை வளமுடன் உயிருடனும் பேணிப் பாதுகாக்கலாம். சாகுபடி தொழில்நுட்பங்களை பயன்படுத்தி நல்ல மகசூல் பெற முடியும் என வேளாண் அலுவலர்கள் தெரிவித்தனர்.

விவசாயிகள் சந்திக்கும் வயல்வெளி பிரச்சனைகள் குறித்து கலந்துரையாடினார். பஞ்சகாவ்யா, 3 ஜி கரைசல், வேப்பம் கொட்டை சாறு தயாரித்து பயன்படுத்துதல் பயிற்சியும் வழங்கப் பட்டது.

இயற்கை விவசாயி பூமிநாதன், இயற்கை விவசாயி ரேவதி ஆகியோர் தாங்கள் கடைப்பிடிக்கும் இயற்கை விவசாயம் முறைகளை இயற்கை விவசாயத்தின் அனுபவங்களை மற்ற விவசாயிகளுட ன்கலந்துரையாடினர்.

வட்டார தொழில்நுட்ப மேலாளர் ராஜேஷ், உதவி மேலாளர் சதீஷ்குமார், துணை வேளாண்மை அலுவலர் பால்கண்ணன், உதவி வேளாண் அலுவலர் முத்துக்குரு ஆகியோர் இந்த பயிற்சி விழாவினை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர். இந்த பயிற்சியில் நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.